(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2022 |
| Deposition Of Witness for | : | PW2 |
| Name | : | **திரு.கருணாகரன்** |
| Father's Name | : | திரு.கருத்தையா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th February 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தாலுகா, ரெகுநாதமடை அஞ்சல், அதிகரை, நடுத்தெரு என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் பரமக்குடியில் பேக்கரியில் வேலை பார்த்து வருகிறேன். எனது தந்தையார் 12.08.2005-ல் இறந்துவிட்டார். அது

சம்பந்தமாக இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் என்னிடம் உள்ளது. எனது தந்தையாருக்கு தெற்கு இளையான்குடியில் பட்டா எண்.196 மற்றும் 197–ல் சொத்துக்கள் உள்ளது.

2. எனது தந்தையார் பெயரில் உள்ள மேற்படி சொத்துக்களை எனது பெயருக்கு மாற்றம் செய்வதற்காக 04.01.2021–ல் பரமக்குடியில் உள்ள தனியார் இ–சேவை மையத்தில் விண்ணப்பித்தேன். அதற்கு கட்டணமாக ரூ.60/– செலுத்தினேன். அதற்கு எனக்கு ஒப்புகைச் சீட்டு கொடுக்கப்பட்டது. அந்த ஒப்புகைச் சீட்டு எண் ஞாபகமில்லை.

3. நான் 11.01.2021 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் இளையான்குடி கிராம நிர்வாக அலுவலர் திரு.கணேசமூர்த்தி என்பவரை இளையான்குடி கண்மாய்கரை ஐயங்கார் பேக்கரி அருகே சந்தித்தேன். அவரிடம் பட்டா Update ஆகி விட்டதா என்று கேட்டேன். ஆஜர் எதிரிதான் அந்த கிராம நிர்வாக அலுவலர் ஆவார். அதற்கு அவர் பட்டா Update செய்து அடுத்த நிலைக்கு மாற்றி பட்டா பெறுவதற்கு ரூ.4000/– லஞ்சமாக கேட்டார். என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது சார், ரொம்ப கஷ்டப்படுகிறேன் என்று சொன்னேன். அதற்கு எதிரி ரூ.4000/– கொடுத்தால்தான் எனது பெயருக்கு பட்டா மாற்றித்தர முடியும் என்று

சொன்னார். அதற்கு சரி என்று சொல்லிவிட்டு நான் வந்து விட்டேன். லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை.

4. 12.01.2021 அன்று காலை 8.30 மணியளவில் சிவகங்கை, லஞ்ச ஒழிப்பு பிரிவில் காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் கொடுக்கப்பட்டதுதான். அந்த **புகார் அ.த.சா.ஆ.2** ஆகும். அந்த புகாரை காவல் ஆய்வாளர் வாங்கிக்கொண்டார். காலை 9.00 மணிக்கு FIR–ல் என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டார். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள **Column எண்.14–ல் உள்ள** கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் அ.த.சா.ஆ.3** ஆகும். முதல் தகவல் அறிக்கையின் நகல் எனக்கு தரப்பட்டது.

5. அதன் தொடர்ச்சியாக நான் சிவகங்கை லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது 10.45 மணியளவில் ஒருவர் வந்தார். பிறகு 10.50 மணியளவில் மற்றொரு நபர் வந்தார். அவர்களின் பெயர்களை காவல் ஆய்வாளர் எனக்கு சொன்னார். முதலில் வந்தவர் பெயர் Dr.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ், மருத்துவர் என்றும், இரண்டாவதாக வந்தவர் பெயர் கணபதி என்பவர் என்றும் அவர் சிவகங்கை நுகர்பொருள்

வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் காவல் ஆய்வாளர் சொன்னார்.

6. காவல் ஆய்வாளர் நான் கொடுத்த புகார் மனுவை சாட்சிகள் இருவரிடமும் படிக்க கொடுத்தார். அதில் உள்ள சங்கதிகள் உண்மையா என்று பார்க்குமாறும் ஆய்வாளர் சொன்னார். நானும் அவை உண்மைதான் என்று சொன்னேன். கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் லஞ்சம் கேட்கிறார் என்று அவர்களிடம் சொன்னேன். நான் இரண்டு ரூ.2000/- நோட்டுகள் கொண்டு சென்று காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். Dr.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் நான் கொண்டு சென்ற ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்த்துவிட்டு நன்றாக தெரியக்கூடிய கண்ணாடி மாதிரி இருந்த பிளாஸ்ட் கப்பில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தது. அந்த கரைசலில் மருத்துவர் அவரது கைவிரல்களை நனைத்தார். அந்த கரைசலில் நிறமாற்றம் எதாவது ஏற்பட்டுள்ளதா என்று காவல் ஆய்வாளர் என்னிடம் கேட்டார். அந்த கரைசலில் நிறமாற்றம் அடையவில்லை என்று சொன்னேன். பிறகு நான் கொண்டு சென்ற ரூபாய் நோட்டுகளின் வரிசை எண்களை ஒப்படைப்பு மகஜரில் குறித்துக் கொண்டார்.

7. திரு.அருள்ராஜ் என்ற போலிசார் காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் பினாப்தலீன் பவுடரை இரண்டு ரூ.2000/– நோட்டுகளின் இருபுறமும் தடவினார். அதன்பிறகு Dr.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் அந்த நோட்டுகளை எண்ணிப்பார்த்துவிட்டு எனது சட்டைப் பாக்கெட்டில் வைத்தார். எனது சட்டையின் இடதுபுற பாக்கெட்டில் ரூபாய் நோட்டுகளை வைப்பதற்கு முன்பு வேறு ஏதாவது பொருளோ, பணமோ எனது பாக்கெட்டில் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டார். அதன்பிறகு அவரது கைவிரல்களை சோடியம் கார்பனேட் கரைசலில் நனைத்தார். அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அந்த கரைசல் கொட்டி அழித்துவிட்டனர். பினாப்தலீன் பவுடரை அலுவலகத்திலேயே வைத்தனர். திரு.அருள்ராஜ் என்ற போலிஸ்காரரும், Dr.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் ஆகிய இருவரும் தங்களது கைகளை கழுவிக்கொண்டனர்.

8. காவல் ஆய்வாளர், அரசு சாட்சி திரு.கணபதியை என்னுடன் கிராம நிர்வாக அலுவலர் அலுவகத்திற்கு சென்று எதிரி லஞ்சம் கேட்டால் நான் லஞ்சப்பணத்தை எதிரியிடம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அதன் பிறகு எதிரி லஞ்சப்பணம் கேட்டு பெற்றுக் கொண்டால்

அலுவலகத்தினை விட்டு வெளியே வந்து எனது முழுக்கைசட்டையின் வலது கை பகுதியை மடித்து காண்பிக்கும்படி காவல் ஆய்வாளர் சொன்னார். கணபதி என்பவரை கிராம நிர்வாக அலுவலர் யார் என்று கேட்டால் உறவினர் என்று சொல்லுமாறு கூறினார். கணபதியிடம் கிராம நிர்வாக அலுவலகத்தில் என்ன நடக்கிறது என்று காவல் ஆய்வாளர் கவனிக்க சொன்னார். என்னிடம் காட்டப்படும் ஒப்படைப்பு மகஜரில் நான்கு பக்கங்களிலும் வலது கீழ் பகுதியில் முதலில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். என்னுடன் அரசு சாட்சிகள் Dr.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ், கணபதி, காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்தனர். ஒப்படைப்பு மகஜரை காலை 11.00 மணிக்கு ஆரம்பித்து 11.30 மணிக்கு முடித்தனர். ஒப்படைப்பு மகஜரை காவல் ஆய்வாளர் தயார் செய்தார். அந்த **ஒப்படைப்பு மகஜர் அ.த.சா.ஆ.4** ஆகும்.

9. அன்றைய தினம் மதியம் சுமார் 2.00 மணியளவில் அரசு வாகனத்தில் நான், Dr.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ், கணபதி, காவல் ஆய்வாளர் மற்றும் லஞ்ச ஒழிப்பு போலிசார் ஆகியோர் இளையான்குடி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு செல்வதற்காக புறப்பட்டு சென்றோம். இளையான்குடி பாரதியார் தெருவில் உள்ள கிராம நிர்வாக

அலுவலகத்திற்கு அருகில் மதியம் 3.50 மணிக்கு சென்றோம். அங்கு அவரது அலுவலகம் பூட்டியிருந்தது. அதன் பிறகு எனது அலைபேசி எண்.6381317463 என்ற எண்ணிலிருந்து கிராம நிர்வாக அலுவலர் கணேசமூர்த்தியின் அலைபேசிக்கு தொடர்பு கொண்டேன். எதிரியின் அலைபேசி எண் எனக்கு ஞாபகமில்லை. எதிரி என்னிடம் நான் அலுவலகத்தில் இல்லை, கண்மாய் கரை அருகில் வரச்சொன்னார். நானும், அரசு சாட்சி கணபதியும் கண்மாய்கரைக்கு எதிரில் உள்ள ஐயங்கார் பேக்கரிக்கு முன்பு நின்று கொண்டிருந்தோம். என்னுடன் வந்த போலிஸ் குழுவினர் சிவகங்கை பஸ் நிறுத்தத்திற்கு உள்ளே மறைந்து நின்று கொண்டிருந்தனர். அப்போது மழை பெய்து கொண்டிருந்தது. அதன் பிறகு கிராம நிர்வாக அலுவலர் ஐயங்கார் பேக்கரிக்கு முன்பு ஒரு Hero Splendor இருசக்கர வாகனத்தில் வந்தார். எதிரி என்னை எதிர் புறம் உள்ள கல்லல்–காரைக்குடி பேருந்துகள் செல்வதற்கான மற்றொரு பஸ் நிறுத்தத்திற்கு அழைத்துச் சென்றார். என்னுடன் கணபதியும் வந்தார்.

10. அந்த கல்லல்–காரைக்குடி பேருந்துகள் செல்வதற்கான பஸ் நிறுத்தத்தில் வைத்து எதிரி கணேசமூர்த்தி லஞ்சப்பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று என்னிடம் கேட்டார். நான் ரூ.4000/– கொண்டு

வந்திருப்பதாகச் சொன்னேன். அவர் ரூ.4000/- என்று ஏற்கனவே என்னிடம் சொல்லியிருந்தார். எதிரி அந்த பணத்தைக் கேட்டவுடன் இரசாயனம் தடவப்பட்ட இரண்டு ரூ.2000/- நோட்டுகளை எனது இடதுபுற சட்டைப் பாக்கெட்டிலிருந்து எடுத்து எதிரியிடம் கொடுத்தேன். அவர் அதை அவரது வலது கையில் வாங்கிக்கொண்டார். எதிரி பணத்தை வாங்கிக் கொண்டு அவரது இடதுபுற சட்டைப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டார். நான் பணம் கொடுத்ததை அரசு சாட்சி கணபதி பார்த்தார். அதன் பிறகு எதிரி பட்டா மாற்றம் தொடர்பாக Update செய்து வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு எனக்கு பட்டா கிடைத்துவிடும் என்று சொல்லி என்னை போகச்சொல்லிவிட்டார். நானும் கணபதியும் கல்லல்-காரைக்குடி பேருந்துகள் செல்வதற்கான பஸ் நிறுத்தத்தை விட்டு வெளியே வந்து நான் எனது முழுக்கைச்சட்டையின் வலது கை பகுதியை மடித்து சிக்னல் காண்பித்தேன்.

11. நான் அவ்வாறு சைகை செய்தவுடன் காவல் ஆய்வாளர், Dr.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் மற்றும் குழுவினர் அங்கு வந்தனர். நான் எதிரியை காவல் ஆய்வாளருக்கு அடையாளம் காட்டினேன். எதிரி அப்போது அந்த பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தார். நாங்கள் நின்று

கொண்டிருந்த பகுதியில் வேறு யாரும் இல்லை. அந்த பேருந்து நிறுத்தம் இரண்டு பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது. அங்கு வந்து எதிரியை பிடித்துக் கொண்டனர். அதன் பிறகு என்னை வீட்டிற்கு போகச்சொல்லிவிட்டனர். அதன் பிறகு நான் 19.01.2021 அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் **இரண்டு ரூ.2000/- நோட்டுகள்** நான் எதிரிக்கு லஞ்சமாக கொடுத்ததுதான். அந்த பணம் **அ.த.பொ.சா.1** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

(**குவிமுச பிரிவு 242(3) இன் கீழ் எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது**).

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.02.20 16:09:44 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.